immediately after the matter was brought to the notice of Government. The total amount misappropriated in this case and how long this fraudulent practice has been going on in the Corporation of Madras will be known only after the report of the Director of Vigilance and Anti-Corruption is received. Any further discussion on the details of this case will prejudice further investigation by the Vigilance Department. I assure the House that effective and impartial action will be taken without fear or favour after the receipt of the report from the Director of Vigilance and Anti-Corruption In the circumstances explained, there is no need for any further discussion.

DR. H. V. HANDE : My request is this. Let the case be referred to C.B.I. so that the burden of the State can be reduced.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லாவற்றையும் கொடுத்துவிடலாம். தமிழ்நாட்டையே தூக்கிக்கொடுத்துவிடலாம். தலைவரவர்களே, இங்கே இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தையொட்டி, அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டுமென்று எதிர்க்கட்சியிலே உள்ளவர்களும், அதை விவாதிக்கத் தேவையில்லை என்கிற கருத்தின் அடிப்படையிலே அமைச்சர் அவர்களும், தங்களுடைய எண்ணங்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அறிவித்தத்தைப் போல் மாநகராட்சி மன்றத்தில் அதிகாரிகள் சிலர் நடத்திய ஊழல் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுடைய நிர்வாகப் பொறுப்பில் இருக்கின்ற தலைவர்கள், இதில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்கிற முறையீட்டை என்னிடத்தில் கொண்டு வந்தவுடனே, உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று நான் ஆணை பிறப்பித்து, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தொடர்ந்து விஜிலென்ஸ் விசாரணை இப்போது நடைபெற்று, அதன்தொடர்பாகப் பலர்கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். திரு. சுப்பையா அவர்கள் இங்கே குறிப்பிட்டது போல், ஒரு அதிகாரியின் வீட்டிலிருந்து ரூ. 30,000 அளவுக்கு தொகை கைப்பற்றப் பட்டிருக்கிறது. ஆகவே, மிகத் தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு இதை விட வேறு ஆதாரங்கள் தேவையில்லை என்று கருதுகிறேன். இதிலே யாரையும் தப்ப

வைக்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு நிச்சயம் இல்லை. இன்னும் சொல்லப்போனால், இதிலே அரசியல் கட்சிச் சார்பின்றி, யாராக இருந்தாலும், அவர்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், இந்த விசாரணை முடிவில் அவர்கள் இதிலே தொடர்புடையவர்கள் என்று நிரூபிக்கப்படுமானால் அவர்கள் மீதும் தகுந்த நடவடிக்கை, அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பாரபட்சம் பார்க்காமல் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியில் உள்ள தலைவர்கள் பேசும்போது, மாநகராட்சி மன்றத்தைக் கலைத்துவிட்டு, இந்த விசாரணையை நடத்தலாம் என்ற யோசனையைச் சொன்னார்கள். நான் அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொண்டு, மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டு, விசாரணை நடைபெறும் என்ற உறுதியை இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்) அதற்கான உத்தரவுகள் முறைப்படி வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : We only wanted judicial enquiry.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த இரண்டு பதில்களை வைத்துககொண்டு பார்க்கிறபோது ஏதோ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இருக்கிறதே தவிர, மற்ற விவரங்கள், நாங்கள் எழுப்பிய விவரங்கள், இந்த நிர்வாகத்தில் ஊழல் இருக்கிறது, இன்று நடக்கும் விசாரணை எங்களுக்குத் திருப்தி இல்லை என்றவற்றிற்கு ஒன்றும் தெளிவாகச் சொல்லப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. தங்கமணி அவர்கள் கேட்டதுபோல் கமிஷன் ஆப் என்கொயரி போட்டால் இன்று நடக்கும் விஜிலன்ஸ் என்கொயரியை நிறுத்த வேண்டியிருக்கும். அதற்கு அவர்கள் தயாரா ?

திரு. கே. டி. கே. தங்கமணி : விசாரணை தொடரப்பட்டு இருக்கிறது. அதை எப்படி நிறுத்தவேண்டியிருக்கும்? சாதாரணமான என்கொயரி கமிஷன் போட்டால், ஏற்கெனவே செய்யப்பட்ட காரி